DMOJUMJ COURT, KUNNAM

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 104 /2021**

2025- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ஆம் நாள் வியாழன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.பா.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராதா | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார் | : | தங்கராசு | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | கீழப்பெரம்பலூர் | சமயம் | : | – |
| நாட்டினம் | : | இந்தியன் | வயது | : | 62 /2025 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்எ ன்று என் வழக்கறிஞரைகேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் தாக்கல் செய்துள்ள பதில் வழக்குரையில் எனது வழக்கறிஞருக்கு யார் விபரம் சொன்னார் என்றால் எனது வழக்கறிஞர் கூறினார். எனது அம்மா பெயர் என்ன என்றால் ராசம்மாள். எனது அப்பா பெயர் தங்கராசு, எனது உடன்பிறந்தவர்கள் அண்ணன் பெரியசாமி, அக்கா பச்சையம்மாள், செல்வாம்பாள் ஆகியோர் ஆவார்கள். ராசம்பாள்க்கும் எனக்கும் என்ன உறவுமுறை என்னவென் எனது எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் அவர் எனது அம்மா. வழக்கு நடைபெறும் சர்வே எண்ணான 206/8 ல் 16 சென்ட் நிலம் இருக்கிறது என்றால் சரிதான்.

2. மேற்படி நிலமானது எங்களது நிலமான சர்வேஎண். 206/8 A3 க்கு மேல்புறம் அமைந்துள்ளது என்றால் சரிதான். ஏகமூர்த்தி படையாச்சி என்பவர் யார் என்றால் எனது அத்தை வீட்டுக்காரர். எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. தோராயமாக எத்தனை வருடம் இருக்கும் என்றால் 60 வருடம் இருக்கும். எனது அப்பா இறப்பு சான்றிதழ் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது அப்பா இறந்து சுமார் 35,40 வருடம் தான் இருக்கும் என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக 60 வருடம் இருக்கும் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனது வாக்குமூலத்தில் கூறியுள்ளதுபோல் சர்வேஎண்.206/8 A3 ல் எங்களுக்கு பாத்தியப்படடதாக கூறப்படும் 4 சென்ட் நிலம் வருகிறது என்பதை நிரூபணம் செய்ய இந்நீதிமன்றத்தில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்தை சேர்த்து 4 சென்ட் தானசெட்டில்மென்ட் மூலம் கிடைக்கப்பட்டதுதான் என் கட்சி என்றால் சரியல்ல. தாவா 2–வது அயிட்ட சொத்தான

சர்வே எண். 206/8 A2 ல் எனக்கோ, எனது குடும்ப உறுப்பினர்களுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எங்களது நிலத்திற்கு வருடா வருடம் கிராம நிர்வாக அலுவலரிடம் சரியான முறையில் வாய்தா வரி செலுத்திவருகிறோமா என்றால் சரிதான். 60 வருடத்திற்கு மேலாக வாய்தா வரி செலுத்தி அனுபவம் செய்து வருகிறீர்களா என்றால் வருகிறோம்.

4. உங்களது பகுதயில் நில உடைமை மேம்பாட்டுதிட்டம் எப்போது நடைமுறைக்கு வந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது வாக்குமூலத்தில் எங்களுடைய நிலத்திற்கு 1 1/2 சென்டிற்கு வருவாய்துறையினர் பட்டா நில அளவை மேம்பாட்டு சமயத்தில் கெடுக்காமல் விட்டுவிட்டனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிக்கும் UDR ல் பட்டா தவறுதலாக வழங்கிவிட்டனர் என்றால் சரிதான். UDR பட்டா தவறாக கொடுத்துவிட்டனர் என்பதற்கு வருவாய்துறையில் மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். மேற்படி மனுவை இந்நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வருவாய் துறையில் மேற்கண்டவாறு எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு கொடுத்திருந்தால் அந்த மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1ன் அசல் ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 ஏற்பட்ட காலகட்டத்தில் சர்வே எண். 206/8 ல் மேற்படி பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை பொறுத்து பத்திரம் ஏற்படுத்தி கொடுத்த எனது தாயார் ராசாம்பாள் என்பவருக்கு உரிமை உள்ளது என்பதை நிரூபணம் செய்ய வருவாய் துறை ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ 1 ஐ ஏற்படுத்தி கொடுத்த ராசாம்பாளுக்கு மேற்படி பத்திரத்தில் கண்டுள்ள சொத்தை பொறுத்து ஆவணம் ஏற்படுத்த எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ 1 போலியான ஆவணம் என்பதாலும் அதனடிப்படையில் எவ்வித அனுபவமும் இல்லாததாலும் நில உடைமை மேம்பாட்டு திட்டம் முன்பும் பின்பும் மேற்படி பத்திரத்தை அனுசரித்த வருவாய்துறை ஆவணங்கள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

6. சர்வே எண். 206/8A3 க்கு மேல்புறம் உள்ள 16 1/2 சென்டை வாதி குடும்ப உறுப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட பாகபிரிவினையில் வாதிக்கு ஒதுக்கப்பட்டு இதுநாள் வரை வாதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் வாதியிடம் கிரயம் கேட்டு மறுத்ததால் அவர்கள் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தபோது அதை தடுப்பதற்கு நீதிமன்றத்தில் இந்த வழக்கை வாதி தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. பின்னிட்டு எங்களது நிலத்தோடு சேர்த்து வாதியின் தாவா 2-வது அயிட்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டோம் என்றால் சரியல்ல.

7. பி.வா.சா.ஆ 4 ஆவணம் 09.07.2025 ல் இந்த வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ 4 எங்களது கட்சியை நிரூபணம் செய்வதற்காக வழக்கிற்காக எங்களால் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 3 எங்களது அனுபவப்படி எங்களது பெயரில் கொடுக்கபட்டது என்றால் சரிதான். நான் கூறுவதுபோல தாவா புல எண்ணில் 4 சென்ட் எங்களுக்கு பாத்தியப்பட்டது என இந்த வழக்கில் எதிர் கட்டுக்கோரிக்கையும் கேட்கவில்லை என்றாலும் தனி வழக்கு தாக்கல் செய்து எவ்வித பரிகாரமும் கேட்கவில்லை என்றாலும் சரிதான். நான் கூறுவதுபோல தாவா புல எண்ணில் 4 சென்ட் எங்கள் பாத்தியத்தில் இல்லை என்பதால் தான் தனி வழக்கோ இவ்வழக்கில் எதிர்கட்டுக்கோரிக்கையோ கேட்கவில்லை என்றால் சரியல்ல.

8. பி.வா.சா.ஆ 3 ல் சர்வே எண். 206/8A3 ல் விஸ்தீரணம் 1 ஏர்ஸ் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் UDR ல் 1 ஏர்ஸ் இருக்கு வில்லங்க சான்றிதழில் 4 சென்ட் உள்ளது. நான் கூறுவதுபோல UDR காலத்தில் ஏற்பட்ட தவறை சரிசெய்வதற்கு இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எடுத்துள்ளேன். வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன். மேற்படி வட்டாட்சியரிடம் கொடுத்த மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. வட்டாட்சியரிடம் எப்போது மனு தாக்கல் செய்தேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் கொடுத்ததாக கூறும் மனு மீது இதுநாள் வரை வருவாய்துறையினர் எவ்வித நடைவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

9. தாவா புல எண்ணில் எனக்கு 4 சென்ட்டில் எவ்வித உரிமையும் இல்லை என்பதால்தான் நான் கொடுத்த மனு மீது இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக போலியாக ஆவணங்களை உருவாக்கி கொண்டு அதனடிப்படையில் வாதி நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 1 ஐ ஏற்படுத்தி கொடுக்க எனது அம்மா ராசாம்பாளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 1 ன் அசல் ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் இந்த ஆவணத்தின் உண்மை தன்மையை இந்நீதிமன்றத்தில் நிரூபணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி சரியான முறையில் மனு தாக்கல் செய்து இடத்தை அளவீடு செய்தார், ஆனால் நாங்கள் தான் அதகார பலத்தை பயன்படுத்தி வருவாய்துறையினரிடம் இருந்து மேற்படி அளவீடு சம்பந்தமான ஆவணம் கொடுக்கவிடாமல் செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. நில அளவீடு செய்த சர்வேயர் மறுநாளே இறந்துவிட்டதால் மேற்படி ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வில்லை.

10. நாங்கள் போலியான ஆவணங்களை உருவாக்கி கொண்டு இவ்வழக்கில் பொய் கட்சி செய்து வாதியின் இடத்தை ஆக்கிரமித்து செய்து கொண்டது சட்டப்படி

ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றாலும் வாதி கோரியுள்ளபடி தாவா படி தீர்ப்பாகவேண்டும் என்றாலும் சரியல்ல.

DMCUMJM COURT, KUNNAM

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.